THE CENTRAL LAW COLLEGE, LIBRARY, SALEM-636 008.

Register No. | | | | | | | | |

**TA3D**

5418–22

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

COMPANY LAW

Time : $2\frac{1}{2}$ hours  Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Members may come and go but the company can go on forever" – Explain the salient features of a company as an artificial legal personality.

   "உறுப்பினர்கள் வருவர், செல்வர், ஆனால் நிறுவனம் என்றும் நிலைத்திருக்கும்" – செயற்கை சட்ட நபரான நிறுவனத்தின் சிறப்பியல்புகளை விளக்கவும்.

2. Explain the rule of majority supremacy in Foss v. Harbottle with its exceptions for protecting minority rights.

   பாஸ் எதிர் ஹார்பாட்டல் வழக்கிலுள்ள பெரும்பான்மை மேலாண்மை விதியை சிறுபான்மை பங்குதாரர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் விதிவிலக்குகளுடன் விவரிக்கவும்.

3. Describe the establishment and proceedings of the Securities and Exchange Board of India (SEBI).

   இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் அமைப்பு மற்றும் நடவடிக்கைகளை விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "Share certificate is prima facie evidence of title and payment on shares by person" – Explain.

   பங்கு சான்றிதழ் என்பது ஒரு நபரின் பங்குகளின் உரிமைமூலம் மற்றும் தொகை செலுத்தியது குறித்த முதல் நோக்கு சாட்சியாகும் – விளக்குக.

5. Explain the powers and duties of company liquidator in winding up of the company.

நிறுவன கலைப்பின் போது நிறுவன கலைப்பு அதிகாரியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை விளக்கவும்.

6. Enumerate the different classes of companies under the Companies Act, 2013.

நிறுவனச் சட்டம், 2013–இன் கீழ் உள்ள பல்வேறு வகையான நிறுவனங்களை எண்ணிக்கையிட்டு விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Minutes

குறிப்பேடு

(b) Key managerial personnel

மேலாளர் சார் பணியாளர்கள்

(c) Dividend

பங்காதாயம்

(d) Ashbury Railway Company v. Riche.

ஆஷ்பெரி இரயில்வே நிறுவனம் எதிர் ரிச்சி

(e) Doctrine of constructive notice.

கொள்நிலை அறிக்கை கோட்பாடு

(f) Statement in lieu of prospectus.

திட்ட அறிவிப்புக்கு ஈடான அறிக்கை

(g) Call on shares.

பங்கு தொகை கோரிக்கை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'W' and 'R' as shareholders and directors formed a textile manufacturing private limited company with equal voting rights. On dissenting opinion, they become hostile and communicated through the secretary. Give a legal solution and analyse whether winding up can be ordered although the business was flourishing.

'அ' மற்றும் 'ஆ' பங்குதாரர்களாக மற்றும் இயக்குநர்களாக சம வாக்குரிமையுடன் ஜவுளி (துணி) உற்பத்தி தனியார் நிறுவனம் ஒன்றை அமைத்தனர். மாறுபட்ட கருத்து வேற்றுமையால் ஏற்பட்ட பகைமை உணர்வால், நிறுவன செயலாளர் மூலம் தொடர்பு கொண்டனர். சட்ட தீர்வளித்து, நிறுவனம் நல்ல நிலையில் உள்ளபோதும் நிறுவன கலைப்பு ஆணையிடலாமா என்று ஆராய்க.



9. Shares were allotted to a minor 'A' on an application signed on her behalf by her guardian. The company went into liquidation. In the winding up of the company, who will be held liable as contributory? Minor or Guardian? Analyse.

'அ' என்ற இளவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகளுக்குரிய விண்ணப்பத்தில் அவரின் சார்பாக அவர் காப்பாளர் கையொப்பமிட்டார். நிறுவனம் கலைக்கப்பட்டது. நிறுவன கலைப்பின்போது பங்களிப்பாராக யார் கருதப்படுவார்? இளவரா? காப்பாளரா? ஆராய்க.

10. A group of company promoters for a new hotel business entered into a contract with 'A' on behalf of company which was not yet registered for purchase of food products. On registration, the company ratified the contract. But the food products were consumed before the payment of amount and the company went into liquidation. Is company liable for the payment? Analyse.

ஒரு புதிய ஹோட்டல் வியாபாரத்தின் நிறுவன துவக்குனர்கள், நிறுவனம் பதிவு செய்யப்படாத நிலையில் உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக 'அ' என்பவரிடம் ஒப்பந்தமிட்டனர். நிறுவனம் பதிவு செய்த பின் ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டது. ஆனால் தொகை செலுத்தப்படுவதற்கு முன்பாக உணவு பொருட்கள் பயன்படுத்தப்பட்டது மற்றும் நிறுவனம் கலைக்கப்பட்டது. செலுத்த வேண்டிய தொகைக்கு நிறுவனம் பொறுப்பாகுமா? ஆராய்க.

———————